செய்தி வெளியீடு எண்: 187 நாள்: 28.02.2019

**<u>இன்று (28.02.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரை</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஈரோடு நகரத்தில் புதிய மேம்பாலம் திறப்பு விழா, ஈரோடு மாநகர சீர்மிகு நகர் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற பணிகள் துவக்க விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனைபேருக்கும் எனது பணிவான வணக்கம்.

இன்றையதினம் நம்முடைய அரசு மருத்துவமனைக்கு அருகில் ஒரு மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அம்மா அரசின் நிர்வாகத் திறமை காரணமாக ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலையில் 2016–2017ஆம் ஆண்டில் ரூபாய் 58.54 கோடி ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, இரண்டாண்டுகளில் முடிக்க வேண்டிய பணியை துரிதப்படுத்தி, மூன்று மாதத்திற்கு முன்பாகவே பாலம் விரைந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு–சென்னிமலை மாவட்ட முக்கியச் சாலையில் ரூபாய் 9.18 கோடியில் அமைக்கப்பட்ட புதிய இரயில்வே மேம்பாலத்தை இன்று மக்கள் பயன்பாட்டிற்கு நான் திறந்து வைத்துள்ளேன்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் ஈரோடு மாவட்டம் சித்தோடு பேரூராட்சி, நல்லாக்கவுண்டம்பாளையம் பகுதியில் 9 ஏக்கர் பரப்பளவில் 73.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 832 குடியிருப்புகள் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சியில் 65 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஈரோடு மாநகராட்சியில் 41.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைகள் சீரமைத்தல் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

உட்பட 305 கோடியே 63 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 45 புதிய திட்டப் பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

ஈரோடு சென்னிமலை சாலையிலிருந்து பெரியசடையாம்பாளையம் செல்லும் சாலையில் 10 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம் உட்பட 81 கோடியே 90 லட்சத்து 29 ஆயிரத்தில் 14 முடிவுற்ற திட்டப் பணிகளை நான் இன்று திறந்து வைத்துள்ளேன்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த 1,102 பயனாளிகளுக்கு 18 கோடியே 63 லட்சத்து 15 ஆயிரத்து 497 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன்.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த இரண்டு காலத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிகழ்த்தப்பட்ட சாதனைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஈரோடு மாநகராட்சி பகுதியில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய அம்ரூத் திட்டத்தின் கீழ் 484 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் என்னால் 11.6.2017 அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் குறுகிய காலத்தில் இப்பணிகள் முடிக்கப்பட்டு ஈரோடு மாவட்ட மக்களுக்கு தங்குதடையற்ற பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் மூலம் நல்லாகவுண்டன்பாளையம் உட்பட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் 327 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பிட்டில் 3,892 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலுள்ள பெருந்துறை மற்றும் 7 பேரூராட்சிகள், 547 ஊரக குடியிருப்புகளுக்கான கொடிவேரி அணையை நீர் ஆதாரமாகக் கொண்டு 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஈரோடு மின்பகிர்மான வட்டத்திற்கு ஐபிடிஎஸ்டி திட்டத்தின் கீழ் 165 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பிட்டில் 809.16 கி.மீ. புதைவடம் மற்றும் 866 புதிய மின்மாற்றிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கோபிசெட்டிபாளையம் மற்றும் சத்தியமங்கலம் வட்டங்களை பிரித்து நம்பியூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் கொடிகாத்த குமரன் பிறந்தநாளான அக்டோபர் மாதம் 5ஆம் தேதியை அரசு விழாவாக கொண்டாட ஆணைப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் பவானி காளிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பிட்டில் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. காளிங்கராயன் அவர்களுக்கு ஆண்டுதோறும் தை மாதம் 5ஆம் தேதி அரசு விழா கொண்டாட ஆணையிடப்பட்டுள்ளது.

அதேபோல, 42 கோடியே 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் அலுவலகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கொங்கு மண்டலத்தின் பாரம்பரியம் மிக்க காங்கேய இன கால்நடை அபிவிருத்திக்கென சத்தியமங்கலம் வட்டம் பகுத்தம்பாளையம் பகுதியில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிட்டில் காங்கேய மாட்டின ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஐஆர்டி பெருந்துறை மருத்துவக் கல்லூரி, அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் நிறைய சாலை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் இரண்டாண்டுகளில் ஈரோடு முழுவதுமுள்ள அனைத்து சாலைகளும் விரிவாக்கம் செய்யப்பட்டு, போக்குவரத்து நெரிசல் இல்லாத மாவட்டமாக இந்த மாவட்டம் திகழும்.

இதுவரையில், தேசிய, மாநில, மாவட்ட நெடுஞ்சாலைகள், மாவட்ட இதர சாலைகள், கரும்பு அபிவிருத்தி சாலைகள் என பல்வேறு சாலைகள் திட்டத்தின் கீழ் 2650 கிலோ மீட்டர் சாலைகள் இன்றைக்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, 2016–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளில் 1,405 கிலோ மீட்டர் சாலைகள் ரூபாய் 831 கோடியில் அகலப்படுத்தப்பட்டு தற்சமயம் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 487 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூபாய் 233 கோடியே 85 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலையில் காளிங்கராயன் இல்லத்திலிருந்து திண்டல்மேடு வரை 5.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில்

உயர்மட்டப்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ஈரோட்டையும் பள்ளிபாளையத்தையும் இணைக்கின்ற பாலம் வேண்டுமென்று வைத்த கோரிக்கையை ஏற்று அந்தப் பாலத்தையும் நிறைவேற்றித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு தான்.

ஈரோடு மற்றும் தொட்டிபாளையம் இரயில் நிலையத்திற்கு இடையே ரூபாய் 10 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் சாஸ்திரி நகர் இரயில்வே மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த அரசும் அம்மாவினுடைய அரசு தான்.

பவானி ஆற்றின் குறுக்கே ரூபாய் 13 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் பாலப் பணிகள் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த அரசும் அம்மாவினுடைய அரசு தான்.

தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களை இணைக்கும் வருத்தபள்ளம் முதல் பர்கூர் வழியாக அந்தியூர் தொகுதியில் உள்ள சாலையை ரூபாய் 91 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணி இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

பவானி நகரத்திற்கு குறுக்கே 8.148 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியும், நில எடுப்பிற்காக ரூபாய் 7 கோடியே 14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிந்தவுடன், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டு அந்தப் பணிகள் துவங்கப்படும்.

அந்தியூர் தொகுதியில், அந்தியூர்—அம்மாப்பேட்டை 17.4 கி.மீ. நீள சாலையை அகலப்படுத்துவதற்காக ரூபாய் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கோபி முதல் சித்தோடு வரை உள்ள சாலையை அகலப்படுத்தி நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மேட்டுப்பாளையம் முதல் சத்தி, சத்தி முதல் அத்தாணி வழியாக பவானி செல்லும் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்படும்.

கோபி நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் முதற்கட்டப் பணி துவங்கப்பட்டுள்ளது.

ஈரோட்டிலிருந்து திருச்செங்கோடு வரை உள்ள சாலை நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தப்படும்.

ஈரோடு—கரூர் சாலையும் நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தப்படும்.

அதேபோல ஈரோடு—பவானி, பவானி—மேட்டூர், மேட்டூர்—தொப்பூர் இந்த சாலையும் விரிவாக்கம் செய்யப்படும். அதேபோல எல்லகோடி, மொடக்குறிச்சி, ஈரோடு, சென்னிமலை சாலையை விரிவாக்கம் செய்வதற்கு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது, அந்தச் சாலையும் விரிவாக்கம் செய்யப்படும். பெருந்துறையிலிருந்து சென்னிமலை வரை உள்ள சாலை விரிவாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகின்றன. ஈரோடிலிருந்து அரச்சலூர் வழியாக காங்கேயம் செல்கிற அந்த சாலையும் விரிவு செய்வதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் 2 ஆண்டுகளில் ஈரோட்டில் உள்ள சாலைகள் விரிவு செய்யப்பட்டு உலகத்தரமான சாலை அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்போராட்டம் நடத்தி காவிரி நதிநீர் பெறுவதற்காக உச்சநீதிமன்றத்தில் வழக்கை தொடர்ந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அம்மாவின் அரசு உன்னிப்பாக கவனித்து, தகுந்த ஆதாரத்தோடு எடுத்துரைத்து இன்றைக்கு காவிரி நதிநீரை பெற்றுத் தந்தது. 50 ஆண்டுகாலம் தீர்க்கமுடியாத பிரச்சினையை தீர்த்த பெருமை அம்மா அரசையே சாரும்.

இன்றைக்கு அண்டை மாநிலத்தை நம்பித்தான் நாம் வேளாண் பணிகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அண்டை மாநிலங்களில் அதிகமாக மழைபெய்து அந்தத் தண்ணீர் வந்தால்தான் நமக்கு தண்ணீர் கிடைக்கும். அந்த சூழ்நிலையை மாற்றி நமது விவசாய பெருமக்களுக்குத் தேவையான நீரை பெறுவதற்காக கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டத்தை நாங்கள் உருவாக்க இருக்கின்றோம். அம்மாவினுடைய அரசு நிச்சயமாக நிறைவேற்றியே தீரும். கோதாவரி ஆற்றில் உற்பத்தியாகின்ற சுமார் 2,500 டிஎம்சி தண்ணீர் கடலில் வீணாகக் கலக்கிறது. அப்படி வீணாக கடலில் கலக்கின்ற நீரை தெலங்கானா, ஆந்திரா வழியாக நம்முடைய காவிரிக்கு கொண்டு வந்து இணைக்க இணைக்கின்றோம். இந்தத் திட்டத்தை மத்திய அரசு செய்கின்றது. இந்தத் திட்டம் நிறைவேறுகின்ற பொழுது நமக்கு 200 டிஎம்சி தண்ணீர் நம்முடைய காவிரி ஆற்றிற்கு கிடைக்க இருக்கின்றது, இதன் மூலம் டெல்டா பாசனத்திற்கு தேவையான நீர் முழுவதும் கிடைக்கும். வேளாண் பெருமக்கள் எந்த காலத்திலும் கஷ்டப்படத் தேவையே இல்லை, குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட பருவத்தில் பயிர் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும். அப்படி அந்தத் தண்ணீர் வருகின்றபொழுது மேட்டூர் அணையில் உள்ள உபரிநீரை எடுத்து, அந்தியூர், பவானி பகுதிகளில் நீரேற்று மூலமாக பாசன வசதி செய்து கொடுக்கப்படும் என்ற

செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அந்தியூர் தொகுதி மக்களுக்கு முழுமையான நீர் கிடைக்க வேண்டும், வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், மணியாச்சி வெள்ள நீரை வருத்தப்பள்ளம் நீர்த்தேக்கம் மற்றும் வழுக்குப்பாறையில் இணைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பை நான் ஏற்கனவே வெளியிட்டுள்ளேன், அந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது, அதற்கான முன்வைப்புத் தொகையும் அம்மாவின் அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, அந்தப் பகுதி வேளாண் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைக்கக்கூடிய வசதி செய்து கொடுக்கப்படும்.

மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட ஈரோடு மாநகருக்கு சொந்தமான சோனாறில் 17 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்த அரசு உங்களுடைய அரசு. நாங்கள் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதை சுட்டிக்காட்டி, அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**